# தேசிய வருமானமும் செலவும்

## பொதுவான போக்குகள்

1988 இல் இலங்கையின் பொருளாதாரம் அதன் 1987 இன் குறைந்த செயலாற்றத்திலிருந்து ஓர் மிதமான மீட்சியினை வெளிப்படுத்தியது. தற்காலிக மதிப்பீடுகட்கமைய மொத்த உள்நாட்டு உற்பத்தி உண்மை நியதிகளில் 1987 இன் 1.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1988 இல் 2.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

1988 இல் பொருளாதார வளர்ச்சிச் செயலாற்றம் மிதமானதாகக் காணப் பட்டாலும், இது பொருளாதாரத்தின் உற்பத்தியையும், பங்கீட்டு நடவடிக்கை களையும் பாதகமாகப் பாதித்த தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்களின் மத்தியிலும் இது அடையப்பட்டமை மெச்சத்தக்க ஒன்றாகும். இவ்வாண்டுக் காலப்பகுதியின் மேம்பட்ட பொருளாதாரச் செயலாற்றத்திற்கு உதவிய முக்கிய காரணிகள் வேளாண்மைத்துறையின் மீட்சியும், தயாரிப்புத்துறையின் தொடர்ச் சியான வளர்ச்சியுமேயாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரைப்பங்கிற்கு வகை கூறும் பணிகள்துறை கணிசமாகப் பங்களித்தபோதும் இதன் வளர்ச்சி முன்னைய ஆண்டினைவிட மெதுவானதாகவே இருந்தது. சுரங்கத்தொழில், கல் லுடைத்தல் துறையும் கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காணப்பட்ட சாதகமான வளர்ச்சிப் போக்கினைப் பேணியது.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 1988 இல் ரூ. 1,980,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டு 1987 இனைவிட 14.2 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் பொரு ளாதாரத்தின் பொதுவான விலை மாற்றங்களை எடுத்துக்காட்டும் குறிகாட்டியான உள்ளடக்க மொ.தே.உ. விலைச் சுருக்கி 1987 இன் 6.8 சதவீத அதிகரிப்போடு ஒப்பிடுகையில் 11.5 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. அதேவேளை சந்தை விலைகளில் ரூ. 2,230,000 இலட்சமென மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி 1987 இன் மதிப்பீடான ரூ. 1,970,000 இலட்சத்தினைவிட 13.4 சத வீதத்தினால் அதிகரித்தது.

1988 இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை தற்காலிகமாக 165.8 இலட்சங்களாக மதிப்பிடப்பட்டு 1987 இனதைவிட 1.4 சதவீதங் கொண்ட வளர்ச்சியினைக் காட்டியது. இதற்கமைய நடைமுறை விலைகளிலான தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 11,939 (ஐ.அ. டொலர் 375) ஆக விளங்கியது. இது 1987 இன் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி மதிப்பீடான ரூ. 10,598 (ஐ.அ. டொலர் 360) இனதைவிட 12.6 சதவீதம் அதிகமான தாகும். உண்மை நியதிகளில் தலைக்குரிய வருமானம், முன்னைய ஆண்டின் சிறிதளவு வளர்ச்சியான 0.1 சதவீதத்தோடு ஒப்பிடுகையில் 1.1 சதவீதத்தால் அதிகரித்தது. 1988 இன் உண்மைத் தேசிய வருமானம் வெளிநாட்டு வர்த்தக மாற்று விகிதங்களின் மாற்றங்களுக்குச் சீராக்கப்பட்ட பின்னரான மதிப்பிடப் பட்ட உண்மைத் தேசிய வருமானம் 1988 இல் 0.1 சதவீதங் கொண்ட சிறிதள வால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

**துறைகளின்படியான செயலாற்றம்**

மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைகளின் படியான செயலாற்றமும் 1982 இன் நிலையான விலைகளின்படி கூட்டப்பட்ட பெறுமதிகளில் ஏற்பட்ட மாற்றங்களும் அட்டவணை 1.2 இல் தரப்பட்டுள்ளன. 1988 இற்கான தற்காலிகத் தரவுகளின் அடிப்படையிலான இம்மதிப்பீடுகள், காட்டுத்தொழில், மீன்பிடி என்பவற்றை உள்ளடக்கிய வேளாண்மைத்துறை 2.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளமையைக் காட்டுகின்றன. முன்னைய ஆண்டின் வேளாண்மைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்குப் பாதகமான வானிலையே பெருமளவிற்குக் காரணமாகும். 1988 இன் வேளாண்மைத் துறையின் மேம்பட்ட செயலாற்றம் தேயிலை, நெல், கரும்பு, சிறு ஏற்றுமதிப் பயிர்கள், சிறு உணவுப் பயிர்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய வேளாண்மை வகைகளின் அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

1987/88 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி வரட்சியினால் பாதிக்கப்பட்ட 1986/87 பெரும்போகப் பயிரினைவிட 9.5 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. 1988 சிறுபோகத்திற்கான பயிர் 952,000 மெற்றிக் தொன்களாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு இது 1987 இன் சிறுபோகப் பயிரைவிடக் குறிப்பிடத்தக்களவிற்கு 29.5 சதவீதம் அதிகமானதாகக் காணப்பட்டது. இதற்கமைய 1988 இன் நெற்றுணைத்துறையின் பொதுவான வளர்ச்சி 16.4 சதவீதமாக மதிப்பிடப்பட்டு அண்மிய கடந்த காலப்பகுதியின் எந்தவொரு வருடத்திலும் பதிவு செய்யப்படாத உயர்ந்த அளவாகக் கொண்டிருந்தது. பெருந்தோட்ட வேளாண்மையில் தேயிலையின் கூட்டப்பட்ட பெறுமதி 6.4 சதவீதத்தாலும், இறப்பரினது கூட்டப்பட்ட பெறுமதி 1 சதவீதத்தாலும் அதிகரித்தன. மாறாக 1988 இன் மதிப்பிடப்பட்ட தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டினைவிட 15.7 சதவீதம் குறைவாக விளங்கியது. இது பெருமளவுக்கு 1986 இலும், 1987 இன் பிற்பகுதியிலும் நிலவிய வரட்சி நிலைமைகளின் காலங்கடந்த தாக்கத்தினால் ஏற்பட்டதாகும். ''ஏனைய வேளாண்மை'' வகையின் கூட்டப்பட்ட பெறுமதியின் பொதுவான அதிகரிப்பிற்குச் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் கரும்பு, மிளகாய் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்புக்கள் உதவின. உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகரித்தமையின் காரணமாக மரம் வெட்டும் தொழிற்பாடுகள் பாதிக்கப்பட்டமையினால் காட்டுத்தொழில் துணைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 12.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் மீன்பிடித் துணைத்துறை 4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

சுரங்கத்தொழிலும், கல்லுடைத்தலும் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 1988 இல் முக்கியமாக இரத்தினக்கல்லகழ்தல் தொடர்ச்சியாக விரிவடைந்தமையால் 9 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இரத்தினக்கல் அகழ்தல் துணைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியின் உயர்ந்த வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்ற வகையில் சிஎஉ நியதிகளில் இரத்தினக்கற்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 27.4 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

அட்டவணை 1.6

## நிலையான விலைகளில் ( 1982 ) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1986 – 1988

| துறை | கூட்டப்பட்ட பெறுமதி (ரூ. ப. இ.) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ப. இ. ரூ.) | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1986 | 1987* | 1988* | 1986 | 1987 | 1988 | 1987 | 1988 | 1987 | 1988 |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 29,106 | 27,409 | 27,984 | 26.1 | 24.2 | 24.1 | -1,697 | 575 | -97.4 | 20.6 |
| 1.1 வேளாண்மை ... | 25,037 | 23,003 | 23,762 | 22.4 | 20.3 | 20.4 | -2,034 | 759 | -116.8 | 27.2 |
| 1.1.1 தேயிலை ... | 2,723 | 2,750 | 2,926 | 2.4 | 2.4 | 2.5 | 27 | 176 | 1.5 | 6.3 |
| 1.1.2 இறப்பர் ... | 856 | 765 | 770 | 0.8 | 0.7 | 0.7 | - 91 | 5 | - 5.2 | 0.2 |
| 1.1.3 தெங்கு ... | 3,935 | 2,967 | 2,501 | 3.5 | 2.6 | 2.1 | - 968 | - 466 | -55.6 | -16.7 |
| 1.1.4 நெல் ... | 6,613 | 5,423 | 6,312 | 5.9 | 4.8 | 5.4 | -1,190 | 889 | 68.3 | 31.9 |
| 1.1.5 ஏனையவை ... | 10,910 | 11,098 | 11,253 | 9.8 | 9.8 | 9.7 | 188 | 155 | 10.8 | 5.6 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 1,958 | 2,215 | 1,943 | 1.8 | 2.0 | 1.7 | 257 | - 272 | 14.8 | - 9.8 |
| 1.3 கடற்றொழில் ... | 2,111 | 2,191 | 2,279 | 1.9 | 1.9 | 2.0 | 80 | 88 | 4.6 | 3.2 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் ... | 2,615 | 3,112 | 3,392 | 2.3 | 2.8 | 2.9 | 497 | 280 | 28.5 | 10.0 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 17,558 | 18,748 | 19,622 | 15.7 | 16.5 | 16.9 | 1,190 | 874 | 68.3 | 31.4 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... | 3,225 | 3,340 | 3,273 | 2.9 | 2.9 | 2.8 | 115 | - 67 | 6.6 | - 2.4 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் ... | 12,108 | 13,113 | 14,030 | 10.8 | 11.6 | 12.1 | 1,005 | 917 | 57.7 | 33.0 |
| 3.3 சிறு கைத்தொழிலும் ஏனையவையும் ... | 2,225 | 2,295 | 2,319 | 2.0 | 2.0 | 2.0 | 70 | 24 | 4.0 | 0.9 |
| 4. கட்டடவாக்கம் ... | 8,191 | 8,338 | 8,463 | 7.3 | 7.4 | 7.3 | 147 | 125 | 8.4 | 4.5 |
| 5. மின்வலு, வளி, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,406 | 1,448 | 1,499 | 1.3 | 1.3 | 1.3 | 42 | 51 | 2.4 | 1.8 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 13,377 | 13,538 | 13,619 | 12.0 | 11.9 | 11.7 | 161 | 81 | 9.2 | 2.9 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 23,821 | 24,496 | 25,164 | 21.4 | 21.6 | 21.7 | 675 | 668 | 38.8 | 24.0 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து ... | 5,174 | 5,490 | 5,819 | 4.6 | 4.8 | 5.0 | 316 | 329 | 18.2 | 11.8 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 3,497 | 3,550 | 3,603 | 3.1 | 3.1 | 3.1 | 53 | 53 | 3.1 | 1.9 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 5,274 | 5,435 | 5,462 | 4.7 | 4.8 | 4.7 | 161 | 27 | 9.2 | 1.0 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 4,242 | 4,358 | 4,423 | 3.8 | 3.9 | 3.8 | 116 | 65 | 6.7 | 2.3 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 114,261 | 115,922 | 119,050 | 102.4 | 102.3 | 102.5 | 1,661 | 3,128 | 95.4 | 112.2 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | - 2,696 | - 2,615 | - 2,955 | - 2.4 | - 2.3 | - 2.5 | 81 | - 340 | 4.6 | -12.2 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 111,565 | 113,307 | 116,095 | 100.0 | 100.0 | 100.0 | 1,742 | 2,788 | 100.0 | 100.0 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வேளாண்மைப் பதனிடல், தொழிற்சாலைக் கைத்தொழில், சிறு கைத் தொழில்கள் என்பனவற்றை உள்ளடக்கிய தாயரிப்புத்துறையின் 1988 இற்கான பொதுவான வளர்ச்சி 4.7 சதவீதமாக மதிப்பிடப்பட்டது. தயாரிப்புத்துறையின் மொத்த உற்பத்தியில் மூன்றிலிரண்டு பங்கை வழங்கும் தொழிற்சாலைக் கைத் தொழில் முன்னைய ஆண்டின் வளர்ச்சிப் போக்கினைப் பேணி வெளி யீட்டினை 7 சதவீதத்தினால் விரிவாக்கியதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தொழிற் சாலைக் கைத்தொழில் துணைத்துறையினுள் தனியார்துறைக் கைத்தொழில் வெளியீடுகள் 10 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் அரசுக்குச் சொந்தமான கைத்தொழில்களின் வெளியீடுகள் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. வேளாண் மைப் பதனிடல் துறையில் (தேயிலை, இறப்பர், தெங்கு) இறப்பர், தேயிலை என் பனவற்றைப் பதனிடுவதன் மூலமான கூட்டப்பட்ட பெறுமதி அதிகரித்தபோதும், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் உற்பத்தி 53 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை யால் ஏற்றுமதி சார்ந்த வேளாண்மை பதனிடல் கைத்தொழிற்துறை 2 சதவீதங் கொண்ட பொதுவான வீழ்ச்சியினைப் பதிவு செய்தது.

கட்டடவாக்கத்துறை 1988 இல் 1.5 சதவீதத்தினால் விரிவடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பணிகள்துறை போக்குவரத்து, சுற்றுலாத் துணைத்துறைகள் உள்நாட்டுக் குழப்பங்கள் பரவியமையினால் பாதகமான முறையில் பாதிக்கப்பட்டபோதும் 2.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. போக்குவரத்து களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்துறை 1988 இல் போக்குவரத்து தடைப்பட்டமை காரணமாக மெதுவான வீதத்திலேயே வளர்ச்சியடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1988 இல் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டங்களின் முன்னேற்றமும் நீர் மின்வலுவின் இயலளவு அதிகரித்தமையும் மின்வலு உருவாக்கம் 3.5 சதவீதத்தினால் அதிகரிக்க உதவியது. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள் என்பன 6 சத வீத வளர்ச்சியைப் பதிவு செய்து விரிவான பணிகள்துறையில் முதன்மை வளர்ச் சித்துறையாக விளங்கியது. 1988 இன் மொத்த, சில்லறை வர்த்தகத்தின் கூட்டப்பட்ட பெறுமதி 2.7 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1988 இன் இறக்கு மதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு இறக்குமதி வர்த்தகத்தின் கூட்டப்பட்ட பெறுமதி யின் அதிகரிப்புக்கு வழிவகுத்தது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் ஏற்றுமதி வர்த் தகம், முன்னைய ஆண்டின் வளர்ச்சியான 1.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இதற்குத் தேயிலை, சிறு ஏற்றுமதிப் பயிர்கள், பட்டை தீட்டப்பட்ட வைரங்கள், கனிப்பொருட்கள் என்பனவற்றி லிருந்தான அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களே காரணமாகும்.

**செலவினம்**

நடைமுறைச் சந்தை விலைகளில் 1988 இன் மொத்த உள்நாட்டுச் செலவினம் ரூ. 2,459,000 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 13.1 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. மொத்த நுகர்வுச் செலவினம் 13.4 சதவீதத்தினால் ரூ. 1,945,000 இலட்சமாக அதிகரித்ததுடன் இதில் தனியார் நுகர்வுச் செலவினம் 13.8 சதவீதத்தினாலும் அரச நுகர்வு 10.2 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன.

அரிசி, கோதுமைமா, சீனி ஏனைய நுகர்வுப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிகளின் அதிகரிப்பினைத் தொடர்ந்து இறக்குமதிப் பொருட்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 25 சதவீதத்தினுல் அதிகரித்தது. இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள், காரணியல்லாப் பணிகள் மீதான இணைந்த நுகர்வுச் செலவினம் 21.5 சதவீதத்தால் அதிகரித்தது.

அட்டவணை 1.7

**மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம் 1986—1988**

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | 1986 | 1987* | 1988* |
|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 42,326 | 45,752 | 50,860 |
| 2. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா க. பெறுமதிகளில்) ... | 9,649 | 10,623 | 11,042 |
| 3. கப்பல்களும் வான்கலங்களும் தவிர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. க. பெறுமதிகளில்)... | 9.649 | 10,623 | 11,042 |
| 4. இறக்குமதி உள்ளடக்கம் (1 இன் சதவீதமாக 2) ... | 22.8 | 23.2 | 21.7 |

* தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி.

1988 இல் அரசின் நுகர்வுச் செலவினம் 10.2 சதவீதத்தால் உயர்வடைந்தது. இவ்வாண்டின் அரசின் நுகர்வுச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு 1988 சனவரியில் சம்பளங்கள் மீளாய்வு செய்யப்பட்டமையினைத் தொடர்ந்து அரசின் கூலிச் செலவு 26 சதவீதத்தினுல் கணிசமாக அதிகரித்தமையும் பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு என்பனவற்றின் அதிகரிப்புமே காரணமாகும்.

நடைமுறை விலைகளில் கையிருப்புக்களில் மாற்றங்களையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1988 இல் முன்னைய ஆண்டின் 8 சதவீத அதிகரிப்போடு பார்க்குமிடத்து 12 சதவீதத்தினுல் அதிகரித்தது. தனியார் துறையினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் இணைந்த மூலதனவாக்கம் 7.8 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. 1987 இன் தொடர்பான அதிகரிப்பு 5.6 சதவீதமாகும். அரசினதும் உள்ளூராட்சி மன்றங்களினதும் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1987 இன் 17 சதவீதத்தோடு ஒப்பிடுகையில் 1988 இல் 25 சதவீதத்தால் விரிவடைந்தது. 1988 இன் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு மூலதனத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குமிடையிலான விகிதாசாரம் 23.1 சதவீதமாக விளங்கி 1987 இன் 23.3 சதவீதத்தினை விடச் சிறிதளவிலான வீழ்ச்சியினைக் காட்டியது.

நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் 11.2 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1988 இல் மூலதனப் பொருட்களின் இறக்குமதி க.ஏ.பெ. ரூபாப் பெறுமதி (கட்டடவாக்கப் பொருட்கள் தவிர்ந்த) 1987 இன் 10 சதவீத அதிகரிப்போடு ஒப்பிடுகையில், 3.9 சதவீதத்தால் உயர்வடைந்து காணப்பட்டது. இதனுல் 1988 இல் மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தின் இறக்குமதிக்கூறில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

அட்டவணை 1.8

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் 1978—1988

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ப. இ. ரூ.) | | | | 1978 விலைகளில் | | | | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1986 | 1987 | 1988* | 1978 | | 1986 | | 1987 | | 1988* | | 1986 இற்கு மேலாக 1987 | 1987 இற்கு மேலாக 1988 |
| | | | | | தொகை ப.இ. ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | | |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 59,537 | 242,881 | 266,946 | 303,057 | 59,537 | 100 | 90,712 | 100 | 91,192 | 100 | 93,469 | 100 | 0.5 | 2.5 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 42,665 | 179,474 | 196,723 | 223,010 | 42,665 | 72 | 64,512 | 71 | 65,480 | 72 | 67,243 | 72 | 1.5 | 2.7 |
| 1.2. பொருட்களினதும், காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் ... | 16,872 | 63,407 | 70,223 | 80,047 | 16,872 | 28 | 26,200 | 29 | 25,712 | 28 | 26,226 | 28 | — 1.9 | 2.0 |
| 2. பயன்பாடு ... | 59,537 | 242,881 | 266,946 | 303,057 | 59,537 | 100 | 90,712 | 100 | 91,192 | 100 | 93,469 | 100 | 0.5 | 2.5 |
| 2.1. நுகர்வு ... | 36,148 | 157,850 | 171,487 | 194,488 | 36,148 | 61 | 54,206 | 59 | 54,659 | 60 | 55,992 | 60 | 0.8 | 2.4 |
| 2.2. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 8,521 | 42,326 | 45,752 | 50,860 | 8,521 | 14 | 15,040 | 17 | 14,976 | 16 | 15,044 | 16 | — 0.4 | 0.4 |
| 2.2.1. அரசு ... | (3,077) | (9,634) | (11,216) | (13,704) | (3,077) | (5) | (4,479) | (5) | (4,299) | (4) | (4,667) | 5 | — 4.0 | 8.5 |
| 2.2.2. அரசகூட்டுத்தாபனங்கள் | (2,056) | (32,692) | (34,536) | (37,156) | (2,056) | (3) | (10,561) | (12) | (10,677) | (12) | (10,377) | 11 | 1.1 | - 2 8 |
| 2.2.3. தனியார்துறை ... | (3,388) | | | | (3,388) | (6) | | | | | | | | |
| 2.3. இருப்புக்களில் மாற்றம் ... | 33 | 137 | 148 | 601 | 33 | — | 38 | — | 37 | — | 128 | — | — | — |
| 2.4. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 14,835 | 42,568 | 49,559 | 57,108 | 14,835 | 25 | 21,428 | 24 | 21,520 | 24 | 22,305 | 24 | 0.4 | 3.6 |

*தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1988 இல் நடைமுறைச் சந்தை விலைகளின்படி, பொறிகள், கருவிகள், ஏனைய மூலதனப் பொருட்கள் என்பவற்றின் மூலதனவாக்கம் 2.1 சதவீதத்தினுல் அதிகரித்தது. இதற்கு மாருகப் போக்குவரத்துக் கருவிகளின் மூலதனவாக்கம் 6.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மீளப் பயிரிடலை உள்ளடக்கிய நில அபிவிருத்தியின் மூலதனவாக்கம் 24.5 சதவீதத்தினுல் அதிகரித்தது. 1988 இல் அரசதுறைப் பெருந்தோட்டங்களின் நில அபிவிருத்தி மீதான மூலதனச் செலவினத்தின் அதிகரிப்பே நில அபிவிருத்தி மூலமான மூலதனவாக்கத்தின் அதிகரிப்புக்கான முக்கிய உதவு காரணியாக விளங்கியது.

**மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்**

1988 இல் இலங்கைப் பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கனவாகக் காணப்பட்ட மொத்த மூலவளங்களின் கிடைப்பனவு ரூ. 3,030,000 இலட்சமாக விளங்கியது. மொத்த மூலவளங்களில் 2,230,000 இலட்சம் (73.6 சதவீதம்) உள்நாட்டு மூலங்களினுல் உதவப்பட்டவேளையில் இறக்குமதிகள் ரூ, 800,000 இலட்சத்தினை (26.4 சதவீதம்) வழங்கின. மொத்த மூலவளங்களில் 64 சதவீதம் நுகர்வில் செலவிடப்பட்டவேளையில் 17 சதவீதம் மூலதனவாக்கத்திலும் 19 சதவீதம் பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகளிலும் செலவிடப்பட்டது.

நிலையான (1978) விலைகளில் மொத்த மூலவளங்களின் கிடைப்பனவு 1987 இன் 0.5 சதவீதங் கொண்ட சிறிதளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1988 இல் 2.5 சதவீதத்தால் அதிகரித்தது. உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரித்த வளர்ச்சியையும், காரணியல்லாப் பணிகளினதும் பொருட்களினதும் அதிகரித்த அளவிலான இறக்குமதிகளையும் பிரதிபலித்தன.

**அட்டவணை 1.9**

**தேசிய சேமிப்புகள் 1986—1988**
(நடைமுறைச் சந்தை விலைகளில்)

(ப இ. ரூபாய்களில்)

| வகை | 1986 | 1987* | 1988* |
|---|---|---|---|
| 1. மொ. உ. உ. சந்தை விலைகளில் | 179,474 | 196,723 | 223,010 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் ... | 21,624 | 25,235 | 28,522 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... | —3,861 | —4,336 | —5,499 |
| 4. தேறிய தனியார் மாற்றல்கள் ... | 8,251 | 9,161 | 9,998 |
| 5. தேசிய சேமிப்புகள் ... | 26,014 | 30,060 | 33,021 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதாசாரம் (1இன் சதவீதமாக 2) ... | 12.0 | 12.8 | 12.8 |
| 7. தேசிய சேமிப்பு விகிதாசாரம் (1இன் சதவீதமாக 5) ... | 14.5 | 15.3 | 14.8 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1987 இன் ரூ. 252,000 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 285,000 இலட்சமாக அதிகரித்தது. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்நாட்டுச் சேமிப்பின் விகிதம் 12.8 சதவீதமாகவே இருந்ததென மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்தான தனியார் பண வனுப்பல்களையும் தேறிய காரணி வருவாயையும் உள்ளடக்கிய மொத்தத் தேசிய சேமிப்புக்கள் 9.9 சதவீதத்தால் அதிகரித்து, 1988 இல் மதிப்பிடப்பட்ட அள வாகிய ரூ. 330,000 இலட்சத்தினை அடைந்தது. எனினும் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தேசிய சேமிப்புக்களின் விகிதம் என வரைவிலக்கணம் செய்யப்பட்ட தேசிய சேமிப்பு விகிதம் 1987 இன் 15.3 சத வீதத்திலிருந்து 1988 இல் 14.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு இவ்வாண்டில் முதலீட்டு வருவாயின் தேறிய வெளிப்பாய்ச்சல்களின் அதிகரிப்பு, தனியார் பண அனுப்பல்களின் தேறிய உட்பாய்ச்சல்களின் அதிகரிப்புடன் ஒப் பிடுகையில் சார்புரீதியில் உயர்வாக இருந்தமையே காரணமாக இருந்தது.